Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified

Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

## "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

### GOAL 2011-2012

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

### TESTIMONIALS

- **Customers...**
  - Up to Jun 11 : 473 Nos.
  - Up to May 11 : 470 Nos.
- **Performance June '11 ...**
  - Turnover growth : 1.39%
  - Employment growth : [-0.57%]
  - 100% Attendance : 9.77%

### MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Ms. J. Vanajambika

### OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels &Tanks

HydroGen Go Green – HHO Generators

Titanictrade (We deliver value chain) – Portal for Exotic Metals

Tiaano Vidyashrm – Play School

### ACHIEVEMENT




## போராடுவதில்தான் ஆனந்தம்

கடவுளிடம் நம்பிக்கை வைத்து அவருக்கு மட்டுமே பயந்து நடந்தால் எவருக்கும் நாம் பயப்பட வேண்டியதில்லை.

உண்மையான அன்பை வெறும் வாய்ப்புகழ்ச்சியின் மூலமாக மட்டும் காட்டிவிட முடியாது. செயலின் மூலமே காட்ட முடியும்.

ஆடம்பரமும் சுதந்திரமும் ஒன்று இல்லை. நம்முடைய நிதி நிலவரத்திற்கு ஏற்றபடி தான் வாழ்க்கை நடத்த வேண்டும்.

ஆனந்தம் என்பது போராட்டத்தில் தான் இருக்கிறது. போராட்டத்தின் விளைச்சல் ஆண்டவன் அருளைப் பொறுத்து கிடைக்கும்.

எண்ணம் என்பது மகத்தானதாகவும், புதுமையானதாகவும் இருந்தால் அதன் விளைவும் மகத்தானதாக இருக்கும்.

அறிவையும் பொறுமையையும் தக்க சமயத்தில் உபயோகித்தால் எவராலும் தகர்க்கவே முடியாத சக்தி வந்து சேரும். அதற்கு நிதானமும் தளரா முயற்சியும் தேவை.

தொகுத்தளித்தவர் ஹMs. P.E. Nancy
Director - Admin

## WHEN YOU THOUGHT I WASN'T LOOKING

A Message every PARENT should read because children are watching US and doing as we do, not as we say:

**When you thought I wasn't looking**, I saw you hang my first painting on the refrigerator, and I immediately want to paint another one. [I learnt encouragement].

**When you thought I wasn't looking,** I saw you feed a stray cat, and I learned that it was good to be kind to animals. [I learnt kindness].

**When you thought I wasn't looking,** I heard you say a prayer, and I knew that there is God I could always talk to, and I learned to trust him. [I learnt Who is God].

**When you thought I wasn't looking,** I saw you making a meal and take it to a friend who was sick, and I learned that we all have to help take care of each other.[I learnt to help].

**When you thought I wasn't looking,** I saw you making my favorite cake for me and I learnt that the little things can be the special things in the life. [I learnt little things done with love make us more happy]

Compiled by : Mr. C. Abilash
Titanictrade

## FUNCTIONAL WISHES

**Independence Day**
**Aug 15th 2011**




**Ramazan**
**Aug 30th 2011**




**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel:22294565 |
| | Jeya Clinic, |
| | Tel: 0-9840873107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. Bala Subramanian. T** <br> Fibtech | Aug. 10 |
| **Mr. Suresh Baskar. P** <br> Sr. Engg – Facilitation | Aug. 13 |
| **Ms. Nancy. P.E** <br> Director – Admin | Aug .19 |
| **Mr. Vinodh Kumar. M** <br> Coating | Aug. 22 |
| **Mr. Santha Kumar. S** <br> Security – Admin | Aug. 27 |
| **Mr. Renjith Kumar. S** <br> Coating | Aug. 29 |

**Best Wishes from Tiaano Employees**

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

1. இந்த உலகத்தில் 5 பேர்களாவது உங்களுக்காக உயிரையே தருவார்கள்.
2. 15 பேர்களாவது உங்களை உண்மையாக நேசிக்கிறார்கள்.
3. ஒவ்வோர் இரவும் உறங்கும் முன் உங்களை நினைத்துக் கொள்ள சிலர் இருக்கிறார்கள்.
4. உங்களால் சிலர் வாழ்க்கையின் பலனை அடைந்திருக்கிறார்கள்.
5. "அவர்கள் இல்லையென்றால் நான் இல்லை" இப்படி ஒருவராவது உங்களைப் பற்றி நிச்சயம் சொல்வார்.
6. உங்களை அறிந்திராத சிலர் கூட உங்களைப்பற்றி நல்ல விதமாக கேள்விப்பட்டிருக்கிறார்கள்.

**அர்த்தமுள்ள வாழ்க்கை உங்களுடையது! அதை மேலும் அர்த்தமுள்ளதாகவும் அற்புதமாகவும் மாற்றுங்கள்.**

கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### சிரிப்பு

சிரிப்பு என்பது மனிதனோடு கூடப்பிறந்த ஒரு உணர்வின் வெளிப்பாடு. இது ஒரு ஆரோக்கியமான மனிதனிடமிருந்து பல விதமான சந்தர்ப்பங்களிலும் இயல்பாக வெளிப்படக்கூடிய ஒன்று. சிரிப்பு மனதையும், உடலையும் வலிமைப்படுத்தி புத்துணர்வுடன் வைத்திருக்கும் என மருத்துவர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

சிரிக்கும் போது உடலில் 300 தசைகள் அசைகின்றன. உடலிலும் மனதிலும் உள்ள அழுத்தங்களும் கவலைகளும் வெளியேறுகின்றன. குறிப்பாக முகத்திலுள்ள தசைகளும், நெஞ்சுத் தசைகளும் பலம் பெற்று ஆரோக்கியத்தைத் பெறுகின்றன. மூளை அதிகமான சந்தோச ஹார்மோன்களை உடலுக்கு அளிக்கிறது. ஒரு நாளில் குழந்தைகள் சராசரியாக 400 தடவைகள் சிரிக்கின்றனர், பெற்றோர்களோ 15 தடவைகளே சிரிக்கின்றனர். பலர் குழுமியுள்ள இடத்தில் ஒருவர் சிரித்தால் அதைப் பார்த்து பலர் சிரிக்க வாய்ப்பு உண்டாகும். வாய்விட்டுச்சிரித்தால் இரத்த ஓட்டம் சீராகி உடல் நலத்திற்கு நன்மை விளைவிக்கும்.

Compiled by : Mr. M. Ranjith
Marketing

### விவேகானந்தரின் அறிவுரைகள்

நம்பிக்கையும் நேர்மையும், பக்தியும் உன்னிடம் இருக்கும் வரை அனைத்தும் முன்னேற்றமடையும்.

ஆசைக்கும் கோபத்திற்கும் அடிமையாக இருந்தால், உண்மையான அன்பை ஒருவனால் உணர முடியாது.

எப்போதும் இனிமையோடும், புன்னகையோடும் இருப்பது நம்மை கடவுளின் அருகில் கொண்டு செல்லும்.

எப்போதும் மனதில் புனிதமான எண்ணங்களையே சிந்தியுங்கள், யாருக்காவது உங்களால் சிறு நன்மையாவது செய்ய முடியுமா என்று எண்ணி உங்கள் கடமைகளைச் செய்யுங்கள்.

Compiled by : Mr. D S Anish
Facilitation

## தெரிந்து கொள்வோம்

### நலமாய் வாழ நல் வழிகள்

1. அதிகாலையில் துயில் எழல் வேண்டும்.
2. காலை வெயில் உடம்பில் படாதவறு துணியால் போர்த்திக் கொள்ளல் வேண்டும்.
3. நகங்களில் சேர்ந்துள்ள அழுக்குகளை எடுத்து விட வேண்டும்.
4. பொருந்தா உணவான புலால் உணவை மறுத்தல் வேண்டும்.
5. கிழங்கு வகைகளில் கருணை கிழங்கு மட்டும் உண்ணல் வேண்டும்.
6. கீரைகள் பழங்கள் சிலவற்றை தேர்ந்தெடுத்து உண்ணல் வேண்டும்.
7. பகலில் உடல் உறக்கம் கொள்ளல் கூடாது. அது உடம்பை சோர்வடைய செய்கிறது.
8. அதிகமான கடுநடை, ஓட்டம் கூடாது.
9. மாலை வெயில்தனில் உலவுதல் வேண்டும்.
10. அளவோடு உண்ணல் வேண்டும். அமைதியாக பேச வேண்டும்.

இந்த ஒழுக்கங்களை கடை பிடித்தால் உடம்பில் எந்த நோயும் இல்லாமல் நலமாக வாழ முடியும்..

Compiled by : Ms. C. Bhavani
Reception

### இந்தியரின் பெருமை

வாஷிங்டன் டைம் பத்திரிக்கை டாப் 100 சக்தி வாய்ந்த நபர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதில் **சக்தி வாய்ந்த 5 இந்தியர்கள்** பெயர் இடம் பெற்றுள்ளது.

1. கிரிக்கெட்டில் இந்தியாவின் கனவை நனவாக்கிய திரு. தோனி
2. தொழிலதிபர் திரு. முகேஷ் அம்பானி
3. பிரெயின் மேப்பர் திரு. ராமசந்திரன்
4. தொழிலதிபர் திரு. அசிம் பிரேம்ஜி
5. சமூக ஆர்வலர் மேடம் அருணா ராய்

## UNITY

Our Country is a Secular Country. In our Country there are many religions, but keep one thing in mind “GOD IS ONE”

'TEMPLE' is a 6 letter word

'CHURCH' is a 6 letter word

'MOSQUE' is a 6 letter word

Also

'GEETA' is a 5 letter word

'BIBLE' is a 5 letter word

'QURAN' is a 5 letter word

That’s Unity, Even letters are in Unity, Why don't we?

So Religion doesn’t matter, We all are called INDIANS

Compiled by: Mr. Shahul Hameed Bava
Facilitation

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S

**காணோம்!**

இப்போதுதான் படிக்க ஆரம்பித்திருக்கிறீர்கள் இன்னும் சில மாதங்கள் தொடரும் இந்த கட்டுரை. ஆனாலும் பரவாயில்லை. புத்தகத்தைக் கொஞ்சம் மூடி வைத்துவிட்டு, உங்கள் வீட்டுச் சமையல் அறையினுள் கொஞ்சம் நுழைந்து பார்த்துவிட்டு வாருங்கள்.

அதிகம் வேண்டாம். நூடுல்ஸ் விளம்பரத்தில் வருவது போல், ‘டு மினிட்ஸ்’ போதும். சுற்றிலும் மேலோட்டமாக ஒரு முறை எல்லாப் பொருள்களையும் நோட்டம் விடுங்கள். எதையும் கையில் எடுத்துப் பார்க்கக்கூட வேண்டியதில்லை.

ஆச்சா! இப்போது வெளியே வந்துவிடுங்கள். மீண்டும் உள்ளே திரும்பிப் பார்த்து அல்பத்தனமாக ‘பிட’ அடிக்காமல் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் சரியாகப் பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்!

1. கடுகு டப்பா எந்த அலமாரியில் இருக்கிறது?
2. சப்பாத்தி மாவு?
3. மிக்ஸியின் சிறிய ஜார் எங்கே இருக்கிறது?
4. அதற்குப் பொருத்தமான மூடி எங்கே?
5. குக்கரின் மூடியில் பொருத்துகிற ரப்பர் வளையம் எங்கே தொங்கிக்கொண்டு இருக்கிறது?
6. அதற்குப் பொருத்தமான மூடியில் பொருத்துகிற ரப்பர் வளையம் எங்கே தொங்கிக்கொண்டு இருக்கிறது?

Cont...4

## கவிதைகள்

### ஏன் வாழ்கிறோம் ...?!!!!

நாம் நினைப்பது நடப்பது இல்லை
நடப்பது நமக்கு பிடிப்பது இல்லை!!!
ஆனால் வாழ்கிறோம் – ஏன்?
நம்மை விட நம்மை அதிகம்
நேசிப்பவர்கள் இருப்பதால் தான்!!!

Compiled by : Mr. Kumar
Design

## அறிவிப்பு

நமது நிறுவனத்தில் நடை பெற உள்ள 9ஆம் ஆண்டு அலுவலர் தின விழாவினை முன்னிட்டு இந்த வருடமும் நமது அலுவலர் குடும்பத்தினர் தங்கள் தனித் திறன்களை பகிர்ந்து கொள்ளவும் மற்றும் அவர்கள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்யவும் ஸ்டால்களை நிர்வாகம் இலவசமாக அமைத்து தர உள்ளது.

திறமையும் விருப்பமும் உள்ளவர்கள் தங்கள் முழு விவரங்களுடன் திரு. R. ஜோஸ்பர் கிங்ஸ்டன் (Cell: 98412 85343) அல்லது திரு. P. பால சுப்ரமணியன் (cell: 99650 86270) அவர்களை அனுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவண்
விழாக்குழு



பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

இத்தனுாண்டு சிறிய சமையலறை அதில் உள்ள பொருள்களும் மிஞ்சிப்போனால் ஐம்பதைத் தாண்டாது. ஆனாலும், நாளில் பல மணி நேரம் சமையலறையில் கழிக்கிறவர்களுக்குக்கூட, இவற்றைத் துல்லியமாக நினைவில் கொண்டுவருவது கொஞ்சம் சிரமம்தான், இல்லையா?

அப்படியே பொடிநடையாக நடந்து, தெரு முனையிலிருக்கிற அண்ணாச்சி மளிகைக் கடையினுள் நுழையுங்கள், அங்கிருக்கிற பொடியனிடம் ‘பயோரியா பல்பொடி நூறு கிராம் வேண்டும்!’ என்று நீங்கள் சொல்லி முடிப்பதற்குள், 1431 பாக்கெட் உங்கள் முன்னால் வந்து விழுகிறது.

ஆச்சரியமாக இல்லை? ஒரே ஒரு நாற்பது வாட்ஸ் பல்ப் சென்ற நூற்றாண்டு இழையின் மிச்சத்தில் ஒளிர்ந்துகொண்டிருக்கிற அண்ணாச்சி கடையினுள் வெளிச்சமே போதாது, நம் வீட்டுச்சமையலறையில் உள்ள பொருள்களைப்போல ஏழெட்டு மடங்கு சமாசாரங்களாவது அந்தக் குறுகிய பரப்பினுள் நிறைந்து கிடக்கிறது. எல்லா ஷெல்ஃப்களிலும் இட நெருக்கடி. பிளாஸ்டிக் பொட்டலங்களை ஒன்றின் மீது ஒன்றாக அடுக்கிவைத்து சமாளித்துக் கொண்டிருக்கிறார்கள். கிடைத்த இரண்டு இடுக்குகளில் எல்லாம் சாஷே பொட்டலங்கள் தொங்குகின்றன.

இத்தனை குழப்பங்களுக்கு நடுவேயும், நாம் கேட்ட ‘பயோரியா’ வைப் பட்டென்று எடுத்து வீசுகிறானே, அந்தப் பையனுக்கு மிஞ்சிப்போனால் இருபது வயதிருக்குமா? இந்த வயதில் எத்தனை ஞாபக சக்தி சாதுரியம்! அதீதமாக ஆச்சரியப்பட வேண்டாம். அண்ணாச்சி கடைப்பொடியனின் இந்தத் திறமைக்கும் ஞாபக சக்திக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை இது வேறுமாதிரியான திறமை.

அதைப்பற்றிப் பார்க்குமுன் இன்னும் சிறிது தூரம் நடந்து வேறொரு காட்சியையும் எட்டிப்பார்த்துவிட்டு வரலாம்.

மிகப் பெரிய தொழிற்சாலை அது. நிமிஷத்துக்குப் பத்து அல்லது பதினைந்து இருசக்கர வாகனங்களைத் தயாரித்து வெளியே துப்பிக்கொண்டிருக்கிறது. இந்தக் கம்பீர ‘பைக’ குகளில் ஏறி உட்கார்ந்து முறுக்கினால் பின் சீட்டில் உட்கார பெண்கள் போட்டி போட்டு முட்டி மோதுவார்கள் என விளம்பரங்கள் கற்பூரம் அனைத்துச் சத்தியம் செய்கின்றன.

தொடரும்...

## 9th Staff Day Inaugural Celebration

